"அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது"



JPL
C12795

பொன்னம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

127950c

272529

அமரர்

**கந்தர் பொன்னம்பலம்**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

**நினைவு வெளியீடு**

**20.06.2019**

272529 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
294.5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



இவ்வுலகில்
**15.06.1939**

இறையுலகில்
**21.05.2019**

# அமரர்
# திரு.கந்தர் பொன்னம்பலம்

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

## திதி நிர்ணய வெண்பா

**ஆண்டு விகாரியதில் வைகாசி யேழாம்நாள்**
**பூண்டபரத் திருதியையே திதியதுவாய் – ஈண்டுபுகழ்**
**கந்தர் – பொன்னம்பலனார் செவ்வாய் தினத்தன்று**
**வேலவன்தாள் சேர்ந்திட்ட நாள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

294.5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வானுறையும்
தெய்வத்தினுள் சங்கமமாகிய
எங்கள் குடும்பத்தின் தலைவரே

நித்தம் நிறைந்துருகி
நெஞ்சம் கதிகலங்கி
நீள்விழி நீரினைச் சிந்த
நினைவு அலைதனில் மூழ்கி
நம்துயர் நிலைத்திட
நின்னுயிர் நீத்த மாயம் தான் என்ன?
நிம்மதியாய் நீர் இறைபதம் சேர்ந்தீர்
நமக்கோ! நின் கனவு
அதுவும் நித்தியம், நிரந்தரம்
எம்மை பிரிந்து சென்ற
எம் தந்தையின்
திருப்பாத கமலங்களுக்கு
இம்மலரினை சமர்ப்பிக்கிறோம்.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பகவான் ஸ்ரீ ஆதிசங்கரா | - | 2 |
| பொன் மொழிகள் (காஞ்சிப் பெரியவாள்) | - | 3 |
| விநாயகர் வணக்கம் | - | 7 |
| விநாயகர் துதி | - | 8 |
| விநாயகர் தியான சுலோகம் | - | 8 |
| விநாயகர் சோடஷ நாமாவளி | - | 9 |
| (i) மூலமந்திரம் | - | 9 |
| (ii) காயத்ரீ மந்திரம் | - | 9 |
| கணேச பூசையும் காரிய சித்தியும் | - | 10 |
| விநாயக அஷ்டோத்தர சதஸ்நாம பூஜை | - | 10 |
| காரிய சித்திமாலை | - | 14 |
| விநாயகர் அகவல் | - | 16 |
| விநாயகர் கவசம் | - | 18 |
| வேழமுகம் | - | 20 |
| விநாயகர் விரதம் | - | 24 |
| விநாயகருடைய விரதங்கள் | - | 25 |
| விருத்தசாலப் புராணம் | - | 25 |
| வேலை கிடைக்க | - | 28 |
| நடராசர் துதி | - | 30 |
| நடராசர் தியான ஸ்லோகம் | - | 31 |
| நடராசர் சோடஷ நாமாவளி | - | 31 |
| (i) மூலமந்திரம் | - | 32 |
| (ii) காயத்திரீ மந்திரம் | - | 32 |
| சிவபெருமான் வழிபாடு (108 போற்றி) | - | 32 |
| அம்பலவாணர் வழிபாடு | - | 34 |
| ஈழநாட்டில் உள்ள தலங்கள் | | |
| (i) திருக்கோணமலை | - | 36 |
| (ii) திருக்கேதீச்சரம் | - | 39 |
| திருச்சிற்றம்பலம் | - | 42 |
| திருநீற்றுப்பதிகம் | - | 43 |
| பஞ்ச புராணம் | - | 45 |
| திருவாசகம் (சிவபுராணம்) | - | 46 |
| போற்றித் திருவகவல் | - | 49 |
| திருச்சதகம் | - | 55 |
| கோவில் மூத்த திருப்பதிகம் | - | 56 |
| திருப்பொற்சுண்ணம் | - | 62 |
| திருப்பள்ளியெழுச்சி | - | 66 |
| திருச்சிற்றம்பலக்கோவை | - | 68 |
| 9ம் திருமுறை - திருவிசைப்பா | - | 69 |
| 9ம் திருமுறை - திருப்பல்லாண்டு | - | 70 |
| 10ம் திருமுறை - திருமந்திரம் | - | 71 |
| திருக்காளத்தி | - | 72 |
| அம்மன் தியான சுலோகம் | - | 74 |
| அம்மன் சோடஷ நாமாவளி | - | 75 |
| (I) அம்மன் மூலமந்திரம் | - | 75 |
| (ii) அம்மன் காயத்தி மந்திரம் | - | 75 |
| உமையம்மை வழிபாடு (108 போற்றி) | - | 76 |
| மாங்கல்ய பாக்கியம் பெற (பதினாறு அம்மன்களை வழிபடும் சுலோகங்கள்) | - | 79 |
| சந்தான பாக்கியம் அருளும் சந்தானலட்சுமி துதி | - | 87 |
| மகாலட்சுமி துதி | - | 87 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளக்கு பூஜை - 90
திருவிளக்கு துதி - 90
முயற்சிகளில் வெற்றி பெற - 94
சரஸ்வதி அந்தாதி - 95
சரஸ்வதி பாடல்கள் - 99
சரஸ்வதி கவசம் - 99
சரஸ்வதி தியானம் - 100
சகலகலாவல்லிமாலை - 101
அறுபத்து நான்கு கலைகள் - 103
சரஸ்வதி துதி - 104
சரஸ்வதி காயத்ரீ மந்திரம் - 104
ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஸ்தோத்திரம் - 105
அபிராமியம்மை பதிகம் - 107
அபிராமியந்தாதி - 111
திருவெம்பாவை - 123
திருப்பாவை - 128
முருகன் தியான சுலோகம் - 136
சோடஷ நாமாவளி - 137
(i) மூலமந்திரம் - 137
(ii) காயத்ரீ மந்திரம் - 137
முருகப் பெருமான் வழிபாடு (108 போற்றி) - 138
திருமுருகன் அருள்பெற - 141
இறையருட் பாடல்கள் - 142
பெரியபுராணம் என்ற திருத்தொண்டர் புராணம் - 145
திருப்புகழ் - 148
கந்த சஷ்டி கவசம் - 156
இறையருள் பெற - 163
திருமுருகாற்றுப்படை - 164
திருச்சீரலைவாய் - 166
கந்தரலங்காரம் - 174
கந்தரநுபூதி - 181
திருவேரகம் (சுவாமி மலை) - 187
பிள்ளைத்தமிழ் - 188
கந்தன் பாமாலை - 189
திரு அருட்பா - 190
மகாவிஷ்ணு தியான சுலோகம் - 192
மகா விஷ்ணு சோடஷ நாமாவளி - 192
(i) மூலமந்திரம் - 193
(ii) காயத்ரீ மந்திரம் - 193
கிருஷ்ணர் பாடல் - 193
ஆஞ்சநேயர் அருள் பெற - 195
இறையருட் பாடல்கள் - 195
ஐயப்பன் துதிப்பாடல்கள் - 196
ஐயப்பன் படிப்பாடல்கள் - 201
இரவில் நடை சாத்தும் சாஸ்தா அஷ்டகம் - 203
அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் 108 சரணக்கோவை - 204
மன்னித்துக் காத்தருள்க - 207
ஐயப்பன் அருள்பெற - 208
ஐயப்பன் நாமாவளிகள் - 209
பகவான் ஸ்ரீ சத்ய ஸாயி அஷ்டோத்ர நாமாவளி - 213
நவக்கிரகங்களின் அருள்பெற - 217
நவக்ரஹ அஷ்டோத்ர சத நாமாவளி - 220
வாழ்விற்குரிய சிந்தனைகள் - 224

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுப்பாதை

"வாழ்த்தும் வாழ்வு வையகம் மீதில் வந்து பிறந்த அனைவர் தமக்கும் அமைவதில்லை முந்திச் செய்த தவத்தின் பயனாய் முழுதாய் வாழ்வு வாழும்!".

எழில் கொஞ்சும் ஈழமணித் திருநாட்டின் யாழ்ப்பாணத்தின் ஆனைக்கோட்டை, மானிப்பாயில் தோன்றிய சரவணை மாணிக்கம் தம்பதிகளின் புதல்வன் கந்தர் அவர்களுக்கும் நாகமுத்தர் சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகள் கனகத்திற்கும் விருப்பு மகனாய் இரண்டாம் புதல்வனாய் ஆனித்திங்கள் பதினைந்தாம் நாளில் ஆண்டு முற்பத்தொன்பதில் **(15.06.1939)** பொன்னம்பலம் வந்து உதித்தார்.

சகோதரிகளாய் வரலஷ்மியும், சுந்தரமும், சகோதரனாய் சரவணமுத்தும் உடனுறைய மகிழ்வாய் வாழ்ந்து மனமே சிறந்தார். துரதிஸ்ட வசமாக தனது 12வது வயதிலேயே அன்புத் தந்தையை இழந்த அன்னார் தன் திறமையை குடும்ப முன்னேற்றத்தில் முழுமையாகச் செலுத்தலானார். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வனுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்." எனும் கூற்றுக்கிணங்க இறை பக்தியில் சிறந்து விளங்கிய அன்னார் முருகனையே தன் குலதெய்வமாக கொண்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி மற்றும் கதிர்காம முருகனையே வணங்கி வந்தார்.

சிறுவயதிலிருந்தே தகைவுறு தொழிலை திறமையாய் ஆற்றி நின்றார். சென்ற ஊரெல்லாம் அருகமைந்த ஆலயங்களிற்குச் சென்று வழிபட்டுவந்த அமரரவர் இல்லறம்தனை நல்லறமாக்க அதே இடத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை செல்லம் தம்பதிகளின் இளைய மங்கை பூமணி அம்மையார் தம்மை கையகப்படுத்தி காதலாய் வாழ்ந்து தொண்டைமனாறு செல்லவச் சந்நிதியான் அருளாய் தவராசா, கலையின்பம், செல்வநாயகம், பிரபாகரன், சுபாஸ்கரன், சிவபாலன், கிருஸ்ணதேவி, குமரன், குமணன் என செல்வங்களைப் பெற்று பெருமையாய் வாழ்ந்தார். தான் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்களை அயராது பாடுபட்டு வளர்த்தெடுத்து கல்விச் செல்வம் தனை கற்பித்து மகிழ்ந்துவந்தவேளை நாட்டின் சூழ்நிலைகள் காரணமாகத் தான் பெற்ற மூத்த மகன் தவராசாவும், கடைசி மகன் குமணனையும் இழந்து பெரும் துயருற்றார். இரு மகன்களும் பாதியிலே பாதையை முடிக்க கவலைகொண்டது முழுக்குடும்பமே. இருந்தும் தனது அயராத மனத் துணிவினால் ஏனைய பிள்ளைகளை நல்நிலையாக்கி உயர்வடையச் செய்தார் அன்னார்.

இவர் தனது பிள்ளைகளை வறுமையையும் பொருட் படுத்தாது கண்ணை இமை காப்பது போல காத்து நல்வழியில் வளர்த்தார். இல்லறம் என்னும் நல்லறத்தில் இனிதே வாழ்ந்து வர பிள்ளைகளும் உறுதுணையாக நின்று இவர்கள் முன்னேற்றத்திற்கு வித்திட்டனர்.

தன் மூத்தமகளான கலையின்பத்தினை சிறந்த கல்வியினை கற்பித்து பின்னர், சுதுமலை மானிப்பாய் வாழ் கந்தையா பொன்னம்மா தம்பதியினரின் அருமை மகனாம் சந்திரலிங்கம் தன்னை விரும்பி தன் அன்பு மகளுக்கு மணமுடித்து அனிதா, தர்ஷன், சஸீந்தன், சதீஸ்ராஜ், ரவிராஜ் என்னும் அருமைப் பேரப்பிள்ளைகளை கண்டு மகிழ்ந்தார். மூத்த பேரப்பிள்ளை அனிதா விஜயை மணமுடித்து லக்ஸ்மியா என்னும் பூட்டப் பிள்ளையையும், மற்றைய பேரப்பிள்ளையான தர்ஷனுக்கு டிலக்ஷனாவை மணமுடித்து வைத்து இன்புற்றார்.

அடுத்த மகனான செல்வநாயகம் அவர்களுக்கு தகுந்த கல்வியையும் ஊட்டி அவருக்கு அச்சுத்தொழிலை தெரிந்தெடுத்து அத்துறையிலேயே அயராது உழைக்க வைத்ததன் பயனாக வவுனியா மாவட்டத்தில் வாணி கணனிப் பதிப்பகத்தின் உரிமையாளராய் உயர்த்தி நின்றார். அத்துறையில் காலது ஊன்ற கருத்தாய் தாமும் உதவி நின்றார். யாழ்ப்பாணம் பருத்தித்துறை வாழ் பஞ்சரத்தினம் தங்கநாயகி தம்பதியினரின் அருமை மகளாம் சிவகாமி (முகாமைத்துவ உதவியாளர், கச்சேரி, வவுனியா) தன்னை விரும்பி தன் அன்பு மகனுக்கு மணமுடித்து ஆதித்தன், பிரணவி என்னும் அருமைப் பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய மகன் பிரபாகரன் அவர்களுக்கு ஆரம்பக் கல்வியினை முறையாக அளித்து பிரான்ஸ் நாட்டில் வசித்துவர வழிகாட்டினார். கிளிநொச்சி முரசுமோட்டை வாழ் கணேஷபாலேந்திரம் பார்வதிதேவி தம்பதியினரின் அருமை மகளாம் பவாணி தன்னை விரும்பி தன் அன்பு மகனுக்கு மணமுடித்து கோவர்த்தனி, ஆராதனி என்னும் அருமைப் பேரப்பிள்ளைகளையும் கண்டுமகிழ்ந்தார்.

மற்றைய மகன் சுபாஸ்கரன் உயர்கல்வியை கற்பித்து அவரும் தன் தமயன் வழியிலே அச்சுத்துறையை தேர்வு செய்ய உறுதுணையாக நின்று வழிகாட்டி, வவுனியாவில் நியூ வாணி டிஜிற்றல் நிறுவனத்திற்கு உரிமையாளராக்கி உவகை கண்டார். புதுக்குடியிருப்பு வாழ் அழகரத்தினம் சிவபாக்கியம் தம்பதியினரின் அருமை மகளாம் புவனலோஜினி தன்னை விரும்பி தன் அன்பு மகனுக்கு மணமுடித்து கிருத்திகா, பிரசாந் என்னும் அருமைப் பேரப்பிள்ளைகளையும் கண்டுமகிழ்ந்தார்.

அடுத்த மகன் சிவபாலன் *B.A(Hons), MBA in Taxation* சிறந்த உயர் கல்வியை வழங்கி தற்போது உதவி ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் அமர்த்தி சமூகத்தில் உயர்நிலையை அடைய உறுதுணையாய் நின்றார். வவுனியாவைச் சேர்ந்த குலசிங்கம் வசந்தமலர் தம்பதியினரின் அருமை மகளாம் தமயந்தி (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி) தன்னை விரும்பி தன் அன்பு மகனுக்கு மணமுடித்து அபினன், அபர்னன், அகரதன் என்னும் அருமைப் பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

இளையமகள் தேவி இங்கிலாந்து நாட்டின் லண்டன் நகரில் வசித்துவருகிறார். தவராசா பேபிகாந்தராணி தம்பதியினரின் அருமை மகனாம் தவக்கொடி தன்னை விரும்பி தன் அன்பு மகளுக்கு மணமுடித்து தானுயன், துவாரகா, துளசி என்னும் அருமைப் பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

கடைசி மகனாம் குமரனுக்கும் உயர்கல்வியினை வழங்கி பின்னர் அச்சுத்துறையை தேர்வு செய்து வவுனியாவில் நியூ வாணி டிஜிற்றல் உரிமையாளராக்கி மகிழ்வுற்றார். ஆனைக்கோட்டை மானிப்பாய் வாழ் லோகநாதன் (ராசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகவதி (தய.ா, த பதியினரின் அருமை மகளாம் கார்த்திகா *B.A.(Hons)* தன்னை விரும்பி தன் அன்பு மகனுக்கு மணமுடித்து பிருந்தகன் என்னும் அருமைப் பேரப்பிள்ளையையும் கண்டு மகிழ்வுற்றார்.

தன் வாழ்வின் இறுதிக்காலங்களில் வவுனியா மண்ணின் தோணிக்கல் பகுதியிலே ஆதிசிவனின் அருளோடு இன்பமாய் வாழ்ந்து வந்தார். அவர் அடிக்கடி கூறும் அமிர்த வாசகம் **"அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது"** என்பதேயாகும்.

இன்பமாய், இனிதாய், எளிமையாய் வாழ்ந்து பேறுகள் பலதைப் பெருமையாய்ப்பெற்று இருக்கையில் கேட்போருக்கு அள்ளிக் கொடுக்கும் உள்ளத்தோடும் வாழ்ந்தார். இந்நிலையில் வாழ்க்கைச் சக்கரம் ஓடிக்கொண்டிருக்கும் போது காலன் கணக்கு தப்பாது. உரிய நேரத்தில் தனக்குரிய கடமையைச் செய்து முடிப்பான். எல்லோரும் ஏங்கித் தவிக்க எதுவும் கூறாமல் அமைதியாக மெல்ல, மெல்ல இம் மண்ணுலக பற்றுக்களை விட்டு இறைவன் தானே தஞ்சம் என உணர்ந்து ஆண்டு விகாரியதில் வைகாசி ஏழாம்நாள் பூண்டபரத் திருதியையே திதியதுவாய் நாளில் மண்ணுலகத்தை நீத்துச் சென்றார். அமரர் ஆன அன்னார் தம்மின் ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனைத் துதிப்போம்.

முற்றும்

"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"

"தாயிற் சிறந்த கோவிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரமும் இல்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் கணேசாயநம



ஓம் என்னும் பிரணவரூப நாயகா
உமையவளின் பாலனே விநாயகா
தேவர் மூவர் போற்றும் வேத விநாயகா
தேவாதி தேவனே விநாயகா
வல்வினைகள் தீர்க்கும் சக்தி நாயகா
வேண்டும் வரம் தந்திடும் விநாயகா
மோனத்தின் முழுப் பொருளே நாயகா
முக்கண்ணன் மைந்தனே விநாயகா

(ஐய சிவஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர்

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே

எமை ஆளாக்கி அருட்பணியில் வழி
நடத்தும் சங்கர பகவத் பாத ஆச்சார்ய
குரு பரம்பரைக்கு எங்களது காணிக்கை

ஹர ஹர சங்கர !! ஜெய ஜெய சங்கர !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காஞ்சிப் பெரியவாள்
ஸ்ரீ.ஸ்ரீ. சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சுவாமிகள் அவர்களின்

# பொன் மொழிகள்

- பிரணவத்திலிருந்து சகல பிரபஞ்சமும் ஜீவராசிகளும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் ஸ்வரூபம் பிள்ளையார்.

- ஜீவனுக்கு அறிவு வேறு எங்கோ இருந்து வரவில்லை. இந்தப் பேரறிவின் திவலைதான் என்று தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தர்மத்துக்காக நியாயத்துக்காக வித்தைக்காக எதையும் தியாகம் பண்ணவேண்டும் என்று தானே தந்தத்தை ஒடித்து தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறார் பிள்ளையார்.

- சமுத்திரமாக இருக்கின்ற ஸ்வாமிதான் அண்டா, செம்பு, உத்திரணி ஜலமாகவும் இருக்கிறார். தம் சக்தியைச் சிறுசிறு ரூபங்களாகச் செய்து கொண்டு பலவித ஜீவஜந்துக்களாகி இருக்கிறார்.

- மனிதனாகும் போது கடவுள் மனம் என்ற ஒன்றைக் கொடுத்து அதைப் பாவ புண்ணியங்களில் ஈடுபடுத்திப் பலனை அனுபவிக்க வைக்கிறார்.

- உலகனைத்தும் நாமாகத் தோன்றவேண்டும். அப்படிப்பட்ட ஞானம் ஒருவனுக்கு அனுபவத்தில் வந்தால் அவன் சண்டாளனாயிருந்தா-லும் அவன்தான் பண்டிதன்.

- போட்டி இருக்கிற வரையில் யாருக்கும் மனநிறைவு உண்டாகாது.

- இருட்டை விரட்டுகிற ஞானப்பிரகாசத்தை அடைகிற பிரயாசையை நாம் ஒருபோதும் தளரவிடக்கூடாது.

- கஷ்டங்களைக் கண்ட இடத்தில் போய்ச் சொல்லிக் கொள்ளாமல் கேட்பவர்கள் எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்றில்லாமல் பகவானிடம் கஷ்டத்தைச் சொல்லிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரபஞ்சத்தை நடத்தி இத்தனை காரியங்களைச் செய்தும் கவனித்தும் பலனளித்தும் வந்தாலும் ஸ்வாமி இதனாலெல்லாம் மனம் சலிக்காமல் சாந்தமாக இருக்கிறார்.

- ஆத்மவிசாரம், தியானம், யோகம் இவைகளால்தான் நம் மனசை 'பட்ட கட்டை' மாதிரி ஆக்கிக் கொண்டு நிறைந்த நிறைவாக இருக்கமுடியும் என்பது உண்மை.

- "ஒரு ஜன்மாவில் இவன் பண்ணிய பாவங்களை இன்னொரு ஜன்மாவிலாவது தீர்த்துக் கொள்ளட்டும்" என்கிற மகாகருணையினால்தான் ஈசுவரன் மறுபடி ஜன்மா தருகிறார்.

- பிறவி கிடைத்தால் ஜீவன் பூரணத்துவம் அடைய மார்க்கம் உண்டாகும். அதற்காகத்தான் காமமே வைத்திருக்கிறது. ஒருவனுடைய சுகத்திற்காக அல்ல.

- அவரவர்கள் நிறைவை உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும் என்பதுதான் நம்முடைய மதம்.

- நாமே நம்மைப் பரீட்சை பண்ணிக் கொள்ளலாம். பரீட்சை செய்து கொள்வதற்காகத்தான் பகவான் ஸ்வப்பனம் உண்டாக்கி இருக்கிறார்.

- உடம்பில் சக்தி குறையும் போது நோய் வருகிறது. வியாதி வருவதற்கு நம்முடைய பலஹீனம்தான் காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஜகன்மாதாவைத் தெரிந்து கொள்கிற வரைதான் துவேஷம், விரோதம், வெறுப்பு எல்லாம் இருக்கும். அவளைத் தெரிந்து •கொண்டபின் இவை எல்லாம் மறைந்து எல்லோரும் சகோதரர்கள் என்ற அன்பு வந்துவிடும்

- நம்மிடையே குறையிருக்கிற வரைக்கும் பிரசாரம் பண்ண முடியாது. நிறைவு வந்தால் பிரசாரம் பண்ண வேண்டிய அவசியம் இல்லை.

- நம்முடைய மதங்கள் எல்லாம் வேதத்தில் இருந்து உண்டானவை. வேர் ஒன்று, கிளைகள் பல.

- சுஸ்வரமாக வீணையை மீட்டிக் கொண்டு சுருதி சுத்தமாக லயம் தவறாமல் நாதோபாசனை செய்துவிட்டால் போதும். தியானம் வேண்டாம், யோகம் வேண்டாம்.

- சத்தியத்தை, சர்க்கரைப் பூச்சிட்ட மாத்திரைகளாக்கித் தரவேண்டும். சர்க்கரைப் பூச்சுத்தானே தவிர முழுவதும் சர்க்கரையாகிவிடக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வணக்கம்



சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்னவதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே.

மூஷிகவாஹன மோதக ஹஸ்த
சாமரகர்ண விலம்பித ஸூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்னவிநாயக பாதநமஸ்தே

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா

- ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவார்தம் கை.

# தியான சுலோகம்

ஓம் கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்தஜம்பு பல சார பட்ஷிதம்
உமா ஸூதம் சோக வினாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம் !

பிடியதன் உரு உமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வழி வலமுறை இறையே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோடஷ நாமாவளி

1. ஓம் சுமுகாய நம:
2. ஓம் ஏக தந்தாய நம:
3. ஓம் கபிலாய நம:
4. ஓம் கஜகர்ணகாய நம :
5. ஓம் லம்போதராய நம:
6. ஓம் விகடாய நம:
7. ஓம் விக்னராஜாய நம:
8. ஓம் கணாதிபாய நம:
9. ஓம் தூமகேதவே நம:
10. ஓம் கணாத்யசாய நம:
11. ஓம் பாலசந்த்ராய நம:
12. ஓம் கஜானனாய நம:
13. ஓம் வக்ரதுண்டாய நம:
14. ஓம் சூர்ப கர்ணாய நம:
15. ஓம் ஹேரம்பாய நம:
16. ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம:

"ஓம் மஹாகணபதியே நம:
நானாவித பரிமள பத்ர புஷ்பாணி சமர்ப்பயாமி!

# கணபதி மூலமந்திரம்
# (ஜப மந்திரம்)

ஓம் கம் கணபதியே நம:

# காயத்ரீ மந்திரம்

ஓம் தத்புருஷாய வித்மஹே

வக்ரதுண்டாய தீமஹி
தந்நோ தந்தி: ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணேச பூஜையும் காரிய சித்தியும்

## விநாயகர் வாழ்த்து

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கட வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்.

நம் மனதில் தோன்றிய எண்ணங்கள் முழு உருப்பெறவும், செயல்பட வேண்டிய காரியங்கள் இடரின்றி நிம்மதி நிறைவேறவும், மனசஞ்சலத்தில் இருந்து விடுபட்டு நிம்மதி அடையவும், வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவும் முழுமுதற் கடவுளாம் எம்பெருமான் விநாயகரை ஜோதிஷ ரீதியான வழிபட்டு வாழ்க்கையில் வெற்றி பெறுவோமாக!

ஓம்கார ரூபத்தின் உறைவிடமாகி ஆனந்தத்தின் இருப்பிடமாய் இருக்கும் விநாயகப் பெருமான் ஜோதிஷ சாத்திரத்தில் சனிபகவானையும் கேது கிரகத்தையும் ப்ரீதியான கிரகங்களாக்கிக் கொண்டார்.

உருண்டு செல்லும் வாழ்க்கையை தன் 'கோல்' சக்தியால் நிறுத்தி நம்மை அந்தஸ்தில் உயர்த்தி ஆனந்தமயமான வாழ்க்கையை அளிக்கும் கடவுளே விநாயகப் பெருமான். இத்தத்துவத்தை உணர்த்தியதே பிள்ளையார் சுழி.

வாரநாட்களில் செவ்வாய்க்கிழமையும், சனிக்கிழமையும், அமாவாசைக்கு 4ம் நாள் (சுக்ல பக்ஷ) சதுர்த்தியும் இப்பெருமானுக்கு உகந்த நாட்களாகும்.

## விநாயக அஷ்டோத்தர சதஸ்நாம பூஜை

ஓம் கஜானனாய நம:
ஓம் கணாத்யக்ஷாய நம:
ஓம் விக்னராஜாய நம:
ஓம் விநாயகாய நம:
ஓம் த்வை மாதுராய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் த்விமுகாய நம:
ஓம் ப்ரமுகாய நம:
ஓம் ஸூமுகாய நம:
ஓம் க்ருதினே நம:
ஓம் சுப்ர தீபாய நம: 10
ஓம் ஸூகநிதயே நம:
ஓம் ஸூராத்யக்ஷாய நம:
ஓம் ஸூராரிக்னாய நம:
ஓம் மஹாகணபதயே நம:
ஓம் மான்யாய நம:
ஓம் பவாத்மஜாய நம:
ஓம் புராண புருஷாய நம:
ஓம் பூஷ்ணே நம:
ஓம் புஷ்கரோத்க்ஷிப்த சாரிணே நம:
ஓம் அக்ர கண்யாய நம: 20
ஓம் அக்ர பூஜ்யாய நம:
ஓம் அக்ர காமினே நம:
ஓம் மந்த்ரக்ருதே நம:
ஓம் சாமீகரப்ரபாய நம:
ஓம் ஸர்வஸ்மை நம:
ஓம் ஸ்ர்வோ பாஸ்யாய நம:
ஓம் ஸர்வகர்த்தரே நம:
ஓம் ஸர்வநேத்தரே நம:
ஓம் ஸர்வஸித்திப்ரதாய நம:
ஓம் ஸர்வஸித்தாய நம: 30
ஓம் மஹாகாலாய நம:
ஓம் மஹாபலாய நம:
ஓம் ஹேரம்பாய நம:
ஓம் லம்ப ஜடராய நம:
ஓம் ஹ்ரஸ்வக்ரீவாய நம:
ஓம் மஹோதராய நம:
ஓம் மகோத்கடாய நம:
ஓம் மஹாவீராய நம:
ஓம் மந்த்ரிணே நம:
ஓம் மங்களஸ்வராய நம: 40
ஓம் ப்ரமதாய நம:
ஓம் ப்ராக்ஞாய நம:
ஓம் மோதகப்ரியாய நம:
ஓம் காந்திமதே நம:
ஓம் க்ருதிமதே நம:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கானே நம:
ஓம் கபித்த மனஸ்பிரியாயை நம:
ஓம் ப்ரம்ஹசாரிணே நம:
ஓம் ப்ரஹ்மரூபிணே நம: 50
ஓம் ப்ரஹ்ம வித்யா நிதான புவே நம:
ஓம் ஜிஷ்ணவே நம:
ஓம் விஷ்ணுப்பிரியாய நம:
ஓம் பக்த ஜீவிதாய நம:
ஓம் ஜிதமன்மதாய நம:
ஓம் ஐஸ்வர காரணாய நம:
ஓம் ஜ்யாயஸே நம:
ஓம் யக்ஷ கின்னரஸேவிதாய நம:
ஓம் கங்கா ஸூதாய நம:
ஓம் விக்னகர்த்தரே நம:
ஓம் விக்ன ஹந்த்ரே நம: 60
ஓம் விஸ்வ நேத்ரே நம:
ஓம் விராட்பதேய நம:
ஓம் மங்கள கணேசா நம:
ஓம் ஸ்ரீபதேய நம:
ஓம் வாக்பதேய நம:
ஓம் ச்ருங்காரிணே நம:
ஓம் ஆச்ரிதவத்ஸலாய நம:
ஓம் சிவப்ரியாய நம:
ஓம் சீக்ரகாரிணே நம: 70
ஓம் சாஸ்வதாய நம:
ஓம் ஓம் பலாய நம:
ஓம் பலோத்ததாய நம:
ஓம் பக்த நிதயே நம:
ஓம் பாவகம்யாய நம:
ஓம் மங்களப்ரதாய நம:
ஓம் அவ்யக்தாய நம:
ஓம் அபாக்ருதபராக்வராய நம:
ஓம் ஸத்யதர்மிணே நம:
ஓம் ஸத்யை நம: 80
ஓம் ஸரஸாம்புநிதியே நம:
ஓம் பாஹேசாய நம:
ஓம் தேசாங்காய நம:
ஓம் மணி கிண் கிணிமேகலாய நம:
ஓம் சமஸ்ததேவதா முர்த்தயே நம:
ஓம் ஸஜிஷ்ணவே நம:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸததோத்திதாயை நம:
ஓம் விகாதகாரிணே நம:
ஓம் விஸ்வக்ருமே நம:
ஓம் விஸ்வரக்ஷாக்ருதயே நம: 90
ஓம் பஞ்சஹஸ்தாய நம:
ஓம் பார்வதி நந்தனாய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் குமாரகுரவே நம:
ஓம் குஞ்ஜராஸூர பஞ்ஜனாய நம:
ஓம் காணாதீசாய நம:
ஓம் கம்பீர நின தாய நம:
ஓம் வடவே நம:
ஓம் அபீஷ்டவரதாய நம:
ஓம் ஜ்யோதிஷே நம: 100
ஓம் ஆக்ராந்தசதஸதத் பிரபவே நம:
ஓம் கல்யாணருரவே நம:
ஓம் உன்மத்தவேஷாய நம:
ஓம் வரஜிதே நம:
ஓம் சமஸ்த ஜகதா தாராய நம:
ஓம் ஸர்வைர்யப்ரதாய நம
ஓம் ஸ்ரீ விக்நேஸ்வராய நம:
ஓம் ஸ்ரீ மகாகணபதியே நம: 108

நானாவித பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி

தசாங்கம் குக்குலொ பேதம் ஸூகந்தம் ஸூமனோகரம்
தூபம் க்ரு ஹாண தேவேச உமாபுத்ரம் நமோஸ்துதே
மகா கணபதயே நம: தூபம் ஆக்ரபயாமி
**(சாம்பிராணி காண்பிக்க)**

ஸாஜ்யம் த்ரிவர்த்தி ஸம்யுக்தம் வஹ்நினா யோஜிதம்மயா
க்ருஹாண மங்களம் தீபம் ஈச புத்ர நமோஸ்துதே
மஹா கணபதயே நம: தீபம் தர்சயாமி, தீபானந்தரம்
ஆசமனீயம் ஸமர்ப்பயாமி
நைவேத்யம் ஷட் ரஸோபேதம் பல லட்டுகமோதகரன்
பஷ்யம் போஷ்யம் சலேஹியம் ச ஸம்க்ருஹாண கணாதிப:

(முன்பு குறிப்பிட்ட நிவேதனம் பொருளை நிவேதனம் செய்க)



KOHA JPL
272529
127950c
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்திமாலை

**இந்த ஸ்தோத்திரமாலையை தினமும் மூன்றுமுறை அல்லது முடிந்தவரை ஓதுக.**

சகல காரிய சித்தி உறுதி
காசிபமாமுனி அருளியது

பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும்
எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி
இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள் அனைத்தும்
எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்புகூறத் தொழுகின்றாம். 1

உலகமுழுதும் நீக்கமற ஒன்றாய்
நிற்கும் பொருள் எவன் அவ்
உலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாதமேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றாம் 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ்சென மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி
கருமம் எவனால் முடியும் அத்
தடவுமருப்புக் கணபதி பொன்
சரணம் சரணம் அடைகின்றாம் 3

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர்
கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினானும் உயிர்க்கு நலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்திநாளும் அறியாமை அகற்றி
அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து
சரணம் அடைகின்றாம். 4

செய்யும் வினை முதல்யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக்
கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றாம் 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன்யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன்எவன்
எண்குணன் எவனப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து
சரணம் அடைகின்றாம் 6

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான்
எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின் மூன்றாய்
நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான்
எவன் வானிடை ஒன்றாய்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற்
சரணம் அடைகின்றாம். 7

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
மாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றாம். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியுந்
திரண்ட முப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதனீன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் மறுத்து
திருந்திய முதயைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற்புகுந்து
குருவடி வாகிக் குவலயத் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினையறிவித்து
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைபிங் கலையின் எழுத்தறி வித்து
கடையிற் சுழிமுனை காபலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தனியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தித்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியின்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்

**(இது முத்கல முனிவருக்கு காசிப மகரிஷி உபதேசித்தது இதைத் தமிழில் கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு பாடித் தந்துள்ளார்)**

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியைஎன்றும் வியங்கியகா
சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க 1

கவின்வளரும் அதரம்கச முகர்காக்க
தாலாங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க அள்ளழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க. 2

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளம் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த்
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்சாக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கஅகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க. 3

பக்கம் இரண்டையும்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை அல்லல்
உக்ககண பன்காக்க ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கஇரு
பதம்ஏக தந்தர் காக்க
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க
விரல்பதும் அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள் விநா
யகர்காக்க கிழக்கினிற்புத் தீசர்காக்க 5

அக்கினியிற் சித்தீசர் காக்கஉமா
புத்திரன்தென் ஆசைகாக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க 6

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்கஇர
வினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கஇராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிப்பேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலமும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க 7

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி
புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிருகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்து சர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக்காக்க 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றிசீ விதம்பகபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்ஓ
திடினும்பால் இடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும் 9

உண்டுடுத்தி உறங்கியெழுந் தோயாம லலைந்தென்ன
கண்டெடுத்த மாமுதல்கல் யாணபுரிக் கணபதிக்கும்
தண்டனிட்டார்க் கின்னருள்கூர் தேசிகரா மன்னவர்க்கும்
செண்டுமல்லி மாலையிட்டுச் செந்தமிழ் வாழ்ந்திட வாழ்வோம்

(வெண்பா)

எல்லா உயிர்க்குயிரா யாளுமிறை ஈசனுமை
கல்யாணஞ்சேர் மடத்தைக்கண் பார்த்திவ்-வெல்லையிலே
காவற்குப் பல்லக்குப் பூதத்தைக் காக்கவைத்தே
யாவர்குஞ் சித்தம் நிறைந்தார்.

உ
சிவமயம்

# வேழமுகம்

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே !

சிந்தித்தவர்க்கருள் கணபதி ஜெயஜெய
சீரிய யானைக் கன்றே ”
அன்புடை அமரரைக் காப்பாய் ”
ஆவித்துணையே கணபதி ”
இண்டைச் சடைமுடி இறைவா ”
ஈசன் தந்தருள் மகனே ”
உன்னிய கருமம் முடிப்பாய் ”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் நவசக்தி உகந்தாய் ஜெயஜெய
எம்பெருமானே இறைவா ”
ஏழுலகுந்தொழ நின்றாய் ”
ஐயா கணபதி நம்பியே ”
ஒற்றை மருப்புடை வித்தகா ”
ஓங்கிய யானைக் கன்றே ”
ஔவிய மில்லா அருளே ”
அஃகர வஸ்து வானவா ”
கணபதி என்வினை களைவாய் ”
ஙப்போல் மழுவொன்றேந்தியே ”
சங்கரன் மகனே சதுரா ”
ஞயநம்பினர்பால் ஆடிய ”
இடம்படு விக்ன விநாயகா ”
இணங்கிய பிள்ளைகள் தலைவா ”
தத்துவ மறைதெரி வித்தகா ”
நன்னெறி விக்ன விநாயகா ”
பள்ளியில் உறைதரும் பிள்ளாய் ”
மன்றுள் ஆடும் மணியே ”
இயங்கிய ஞானக்குன்றே ”
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ”
இலகக் கொம்பொன்று ஏந்தியே ”
வஞ்சனை பலவும் தீர்ப்பாய் ”
அழகிய யானைக் கன்றே ”
இளமத யானை முகத்தாய் ”
இரகுபதி விக்ன விநாயகா ”
அனந்தலோ டாதிய அடிதொழ அருளே ”

பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை ஓரத்திரே
அரச மரத்தின் நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார்
வினைகள் தீர்க்கும் பிள்ளையார்

யானை முகம் கொண்டவர்
ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர்
பக்தர் குறையைத் தீர்ப்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சளிலே செய்யினும்
மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் ஆழ்த்தும் பிள்ளையார்

ஆறுமுக வேலனுக்கு
அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும்
நீக்கி வைக்கும் பிள்ளையார்

அவல் கடலை சுண்டலும்
அரிய மோதகங்களும்
கவலையின்றித் தின்னுவார்
கருணைமாரி பொழிகுவார்

கலியுகத்து விந்தைகளைக்
காணவேண்டி அனுதினம்
எலியின் மீது ஏறியே
இஷ்டம் போலச் சுற்றுவார்

மதம்மூன்றும் ஆறாக வருங்களிற்று
முகத்தானை மனத்தி லேதான்
பதம்ஊன்றும் அருந்தவர்க்கும் பதம்மூன்று
கடந்தபதம் பாலிப் பானை

விதம்மூன்று புரம்கடிந்தார் அளித்துஅருளும்
ஒருமுதலை வேரோ டேசஞ்
சிதம்மூன்று பிறப்புஒழிக்கும் ஆனைதிறை
கொண்டவனைச் சிந்தை சேர்ப்போம்

- சைவஎல்லப்ப நாவலர்

தழைவிரி கடுக்கை மாலைத்
தனிமுதல் சடையில் சூடும்
குழவிவெண் திங்கள் இற்ற
கோட்டது குறை என்று எண்ணிப்
புழைநெடும் கரத்தால் பற்றிப்
பொற்புற இணைத்து நோக்கும்
மழைமதக் களிற்றின் செய்ய
மலரடி சென்னி வைப்பாம்

- அதிவீரராமபாண்டியன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மைப் புவனம் முழுதுஈன்ற
முதல்வி யோடும் விடைப்பாகன்
அம்மை தருக முத்தம் என
அழைப்பு ஆங்கே சிறிது அகன்று,
தம்மில் முத்தம் கொள, நோக்கிச்
சற்றே நகைக்கும் வேழமுகன்
செம்மை முளரி மலர்ந்தாள், எம்
சென்னி மிசையில் புனைவாமே.

– நந்திக்கலம்பகம்

கணபதி கணபதி பாலயமாம் கௌரீ தனயா பாலயமாம்
கௌரீ நந்தன கஜவதனா கணேச வரதா மாம் பாஹி
கஜமுக கஜமுக கணநாதா கணேச வரதா மாம் பாஹி
கஜானனா ஓம் கஜவதனா கஜமுக வரதா கஜானனா
மூஷிக வாஹன கஜானனா மோதக ஹஸ்தா கஜானனா
சாமர கர்ண கஜானனா விளம்பித ஸூத்ரா கஜானனா
வாமன ரூபா கஜானனா மஹேச்வர புத்ரா கஜானனா
விக்ன விநாசக கஜானனா பாத நமஸ்தே கஜானனா
பக்தஜன ப்ரிய கஜானனா பார்வதி புத்ரா கஜானனா
பாஹி பாஹி கஜானனா பார்வதி நந்தன கஜானனா

உம்பர் தரு தேனுமணிக் கசிவாகி
ஒண் கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகப் பலகாலும்
என் தனுயிர்க் காதரவும் அருள்வாயே
தம்பி தனக்காக வந்த துணைவோனே
தந்தை வலத் தாலருங்கை கனியோனே
அன்பர் தமக்கான நிலை பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமானே

– அருணகிரிநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சதுர்த்தி விரதம்

ஒரு சமயம் விநாயகர் கைலாயத்தில் நர்த்தனம் செய்திருக்கிறார். சரிந்த தொந்தி குறுகிய கால்கள். இவரைப் பார்த்த சந்திரன் சிரித்தான். ஒன்று சிரிப்பை அடக்கி இருக்க வேண்டும். இல்லையேல் அப்படி சிரித்ததற்கு ஒரு பொய்யையாவது சொல்லியிருக்க வேண்டும். சந்திரன் இந்த இரண்டையும் செய்யவில்லை. விநாயகர் கோபித்து சந்திரனைச் சபித்தே விட்டார். சாபம் : "அன்று முதல் சந்திரன் உருவை எவருமே பார்க்கமாட்டார்கள். கண்டவரும் நிந்தை செய்து ஒதுக்குவார்கள். அத்தகைய நீசனாக ஆகட்டும்" என்பதுதான்.

சந்திரன் அன்றுமுதல் கலையிழந்து தேய்ந்து மெலிந்தான். கண்டவரும் ஒதுக்கினர். கடைசியில் விநாயகரிடமே வந்து மன்னிப்புக் கேட்டான். விநாயகர் மனம் இரங்கி சுக்ல சதுர்த்தியில் உன்னைக் காண்பவர்க்கெல்லாம் வீண் அபவாதம் ஏற்படட்டும். ஆனால் ஆவணி மாதம் சுக்ல சதுர்த்தியில் என்னைப் பூஜித்தால் அந்த அபவாதம் நீங்கட்டும் என்று சாபத்தை மாற்றினார். இது காரணமாக வளர்பிறை (நான்காம் பிறை) சதுர்த்தியன்று இன்று மக்கள் சந்திரனைப் பார்க்காது ஒதுக்கிறார்கள். அப்படித் தப்பித்தவறி பார்ப்பவர்கள் ஆவணி மாதம் சுக்ல சதுர்த்தியில் விரதம் அனுஷ்டித்து விநாயகரை வணங்கி சாப விமோசனம் பெறுகின்றனர்.

அன்று முதல் சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இவ்விரதம் முக்கியமாக பெண்கள் அனுஷ்டிக்க வேண்டியது. காரணம் இந்த உலகில் ஆண்களைவிட பெண்களே காரணம் இல்லாமல் வீண் அபவாதத்துக்கு உள்ளாகின்றனர். ஆதலால் அவர்கள் மேல் ஏற்படும் வீண் அபவாதங்கள் நீங்கவும் அவர்கள் விரும்பும் பிள்ளைப்பேறு முதலிய எண்ணங்கள் சித்தி பெறவும் சித்தி விநாயகரை அவர் விரும்பிய சதுர்த்தி அன்று விரதம் அனுஷ்டித்து வழிபடவேண்டும். வருஷம் முழுவதும் 24 சதுர்த்தியிலும் விரதம் அனுஷ்டிப்பதோடு ஆவணி சுக்ல சதுர்த்தியில் விரதம் பூர்த்தி செய்து விநாயகரை வழிபடுவது மூலம் பெறுதற்கரிய பேறுகளைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகருடைய விரதங்கள்

KOHA JPL

வெள்ளிக்கிழமை, சதுர்த்தி, மார்கழி மாதம் வளர்பிறை ஷஷ்டி ஆகிய நாட்களில் விநாயகரை நன்கு உபவாசம் இருந்து வழிபட வேண்டும்.

ஆவணி வளர்பிறை சதுர்த்தி மிகவும் சிறந்தது.

விரத நாளில் விநாயகர் திருக்கோவிலுக்குச் சென்று நெய் தீபம் இட்டு அறுகு சாத்தி வலம் வந்து குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டு வழிபாடு புரிக.

விநாயகருக்கு துளசி சாத்துதல் கூடாது.

272529

## விருத்தாசலப் புராணம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைப் போக்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாய்.

## ஸ்ரீ விநாயக ஸதகம்

குருவே பரமன் கொழுந்தே பணிந்தேன்
குவலயம் போற்றும் கணநாதா!
வருவாய் நினைவில் வந்தெனை ஆள்வாய்
வடிவேலனின் சோதரனே

## நன்னெறி

மின்னெறி சடாமுடி விநாயகன் அடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

அல்லல்போம் வல்வினைபோம்
அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போம்
போகாத் துயரம்போம்
நல்ல குணமதிக மாமருணைக்
கோபுரத்தில் வீற்றிருக்கும்
செல்வ கணபதியைக்
கைதொழுதக்கால்

## திருமதி சௌந்திரா கைலாசம்

தொழுது நெஞ்சுருகி நாளும்
தோத்திரம் புரிவோம் பொங்கி
அழுத கண்ணீரில் மூழ்கி
ஆனந்த முத்தெடுப்போம்
எழுதுதற்கு அரிய யானை
எழில் முகன் அடியில் நம்மை
முழுதுமாய் ஒப்படைக்க
முந்துவோம் முந்துவோம்!

## திருநெறி - அருட்கவி ஸ்ரீ காளிதாசர்

இகநலம் பரநலம் இரண்டும் வாய்க்குமே
துகளெனத் தகர்ந்திடும் துயரத் தொல்வினை
புகலெனப் பணிபவர் புனிதப் புந்தியுள்
தகவுறுங் கணபதிப் பதங்கள் காக்கவே

மறைமொழி மனத்துற மலரார் மாணடி
நிறைமதி நிலவு செந்நெறியை நல்குவாய்
முறையிது வழிபட எனுமா மூலமே
இறையெனுங் கணபதிப் பதங்கள் காக்கவே

## வெற்றி வேற்கை

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புதமலர் தலைக் கணிவோமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவநீதேசுவரசுவாமி குறவஞ்சி

சீர் மாகரியின் செழு மாமுகவா
தேர் மாமகுடந் திகழ் அம்பகவா
கார்ஆகு இணை கழல் பாவியவா
பாரார் சிகரைப்பதி மேவியவா

## திருமூலர்

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கரும மாதலால்
கணபதி என்றிடக் கரும மில்லையே

## பாரதியார்

எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி
மனதிற் சலனம் இல்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின் மவுன
நிலை வந்திட நீ செயல் வேண்டும்
கணக்குஞ் செல்வம் நூறுவயது
இவையும் தர நீ கடவாயே!

## ஔவையார் பாடல்கள்

வாக்குண்டாம் நல்ல மன முண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா

வெள்ளைக் கொம்பன் விநாயகனே
வினைகள் தீர்க்கும் ஐங்கரனே
அன்னை பராசக்தி அருந்தவப் புதல்வா
ஆனைமுகத்து விநாயகனே (வெ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை கிடைக்க

## விநாயகர் துதி

நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவாணைப் பதம் பணிவாம்

- கந்தரனுபூதி

ஓதவினை அகலும் ஓங்குபுகழ் பெருகும்
காதல் பொருளனைத்தும் கைகூடும் - சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல் பாரதப்போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்.

- பெருந்தேவனார்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருகும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலால் கூப்புவார் தம்கை.

- கபிலதேவர்

# வேலை கிடைக்க வேலவர் தூது

சீருலவும் தென்பழனி தெண்டா யுதபாணிப்
பேருலவும் மாலைதனைப் பிரபஞ்சத் திற்பாடப்
பாருலவும் மேருதனிற் பாரதத்தை நேர்வரைந்து
காருலவுந் தொந்திக் கணபதிதான் காப்பாமே !

# இறையருட்பாக்கள்

வையாபுரி நாட்டில் வளர்ந்திடுமென் ஐயனுக்கு
ஐயாயிரம் சரணம் அடிபணிந்து தெண்டனிட்டேன்
மெய்ஞான தேசிகனே வேலாயுதம் படைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையாபுரிக் கரசே வருவாய் இது சமயம்
ஆறாறு நூறாறு அஷ்டமங் கலஞ்சூழ்ந்த
வீரா சிவகிரியின் வேலாயுதச் சாமி
சூராதி படைவென்ற சுப்பைய்யா இப்போது
வாரா திருப்பதென்ன வருவாய் இதுசமயம்.

தஞ்சமென் றநின்பதத்திற் சரணம் புகுந்த என்றன்
நெஞ்சிற் கவலை யெல்லாம் நீதீர்க்க வேணுமையா
அஞ்சலென்று வந்தவர்க்கு ஆதரவு சொல்லுமிப்போ
மஞ்சரி மணவாளா வருவாய் இதுசமயம்.

மங்கை நகரதனில் மறையோதும் வேதியராய்
அங்கசனைக் காய்ந்த அரனார் திருமகனே
சங்கர நாராயணர்சொல் சண்முகனே கந்தையா!
மங்கைவள்ளி பங்காளா வருவாய் இதுசமயம்.

ஏன்தான் முருகா இரக்கமில்லை யோஉனக்கு
நான்தான் உரைப்பதுவும் நற்செவியில் கேட்கல்லையோ!
சார்ந்தோடும் வாவித்தடாகமும் வையாபுரியின்
மாற்தோப்பும் விட்டு வருவாய் இதுசமயம்.

ஜெகமே அளந்தஅருள் திருமால் மருகோனே
அகமே உருகுதைய்யா ஆற்றுதற்கு நீ இரங்காய்
குகனே முருகய்யா குழந்தையைத் தேடியிப்போ
மகனே எனஓடி வருவாய் இதுசமயம்.

சின்னவய தென்றெனது சிந்தை மெலிவதற்கு
என்னவிதிப் பயனோ ஏதறிய மாட்டேன்கேள்
உன்னையே நான் துதித்து உன்பாதமே பணிய
வண்ண மயிலேறி வருவாய் இதுசமயம்.

## பிள்ளையார் வழிபாடு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

ஓம் எனும் பொருளாய் உள்ளோய் போற்றி
பூமனும் பொருள்தொறும் பொழிவாய் போற்றி
அகரம் முதலென ஆனாய் போற்றி
அகர உகர ஆதி போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நடராசர் துதி



திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

தானந்தம் இல்லாச் சதானந்த சக்திமேல்
தேனுந்தும் ஆனந்த மாநடங் கண்டீர்
ஞானங் கடந்து நடஞ்செய்யும் நம்பிக்கங்
கானந்தக் கூத்தாட ஆடரங் கானதே.

ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்த மாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் தானுக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியான ஸ்லோகம்

ஓம் வந்தே சம்புமுபாதிம் ஸூரகுரும்
வந்தே ஜகத்காரணம்
வந்தே பந்தகபூஷணம் ம்ருகதரம்
வந்தே பசூநாம் பதிம்
வந்தே ஸூர்ய சகாங்கவஹ்நி நயனம்
வந்தே முகுந்தப்ரியம்
வந்தே பக்தஜநாச்ரயஞ்ச வரதம்
வந்தே சிவம் சங்கரம்

"வான நாடுடை மைந்தனே"
ஓ என்பன் வந்தரு ளாய் என்பன்:
"பால்நெய் ஐதுடன் ஆடிய
படர்சடைப் பால்வண்ண னே! என்பன்:
தேன் மர்பொழில் சூழ்தரு
தில்லையுள் திருநடம் புரிகின்ற
ஏன மாமணிப் பூணணி
மார்பனே! எனக்கருள் புரியாயே.

## சோடஷ நாமாவளி

1. ஓம் சிவாய நம:
2. ஓம் பசுபதயே நம:
3. ஓம் மஹஸ்வராய நம:
4. ஓம் விருபாக்ஷாய நம:
5. ஓம் ப்ரமதாதிபாய நம:
6. ஓம் சம்பவே நம:
7. ஓம் சங்கராய நம:
8. ஓம் சமஸ்தி வித்யா நகரீ நாயகயா நம:
9. ஓம் ருத்திராய நம:
10. ஓம் நீலகண்டாய நம:
11. ஓம் ஹ்ரிகேஸாய நம:
12. ஓம் கபர்திநே நம:
13. ஓம் ஹராய நம:
14. ஓம் பிநாகிநே நம:
15. ஓம் சந்த்ரசேகராய நம:
16. ஓம் ஸதாசிவாய நம:

ஸ்ரீ உமா மஹேஸ்வராய நம:
நானுவித பரிமள பத்ர புஷ்பாணி சமர்ப்பயாமி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலமந்திரம் (ஜப மந்திரம்)

ஓம் ஹ்ரீம் சிவாய நம:

# காயத்ரீ மந்திரம்

ஓம் தத்புருஷாய வித்மஹே
மஹாதேவாய தீமஹி
தந்நோ ருத்ர: ப்ரசோதயாத்

# சிவபெருமான் வழிபாடு

## (108 போற்றி)
## அப்பரடிகள் அருள்வாக்கு

கற்றவர்கள் உண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுகம் ஆனாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
வங்கமலி கடல்நஞ்சம் உண்டாய் போற்றி
மதயானை ஈருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோல் ஆடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக் கண் உடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி
பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதம் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங்காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திரு மூலட்டானனே போற்றி போற்றி
வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும் பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணிந்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையா போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
பூவார்த்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்த்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி அளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை ஆண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளுஞ்
சிரம் நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

## அம்பலவாணர் வழிபாடு

கோவே கூத்தா குணமலை போற்றி
சேவேற் றுக்கொடித் தேவா போற்றி
அஞ்செழுத் துட்பொருள் ஆனாய் போற்றி
நஞ்சமர் கண்ட நாயக போற்றி
மும்மலம் முருக்கும் செம்மால் போற்றி
செம்மைசேர் நிறத்துச் சேவக போற்றி
அரதன சபைநடம் ஆடியோய் போற்றி
அருளுரு வாகிய அண்ணல் போற்றி
பொன்னம் பல நடம் புரிவோய் போற்றி
இன்தா மிரசபை இசைந்தாய் போற்றி
நெல்வே லியில்நடம் நிலைத்தாய் போற்றி
பல்வே றுருவாய்ப் பரந்தாய் போற்றி
குற்றா லத்துறை கூத்தா போற்றி
உற்றபே ரூர்நடம் உகந்தாய் போற்றி
மதுரையில் மாறி ஆடியோய் போற்றி
குதிரை விற்ற கோவே போற்றி
திருப்புத் தூர்நடஞ் செய்தாய் போற்றி
புலிக்கால் முனிக்கருள் பொன்னடி போற்றி
நிலைக்கப் பதஞ்சலி நேர்ந்தாய் போற்றி
உடுக்கின் ஒருகையால் படைப்பாய் போற்றி
அடுக்குங் கையால் அமைப்பாய் போற்றி
அனல்சேர் கையால் அழிப்பாய் போற்றி
புனல்சேர் செஞ்சடைப் புனித போற்றி
ஊன்றிய அடியால் ஒடுக்குவோம் போற்றி
நான்றநற் காலால் நல்குவோய் போற்றி
இத் தொழில் ஐந்தும் ஏற்றோய் போற்றி
முத்தொழில் முகக்கும் முகிலே போற்றி
மைப்படி கண்ணி மணாள போற்றி
முப்புரம் எரித்த முதல்வ போற்றி
சங்கக் குழையணி தாயே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கண் ஏறுடைச் செல்வா போற்றி
எண்ணொடும் எழுத்தாம் இயலே போற்றி
பண்ணொடும் பயனார் பாட்டே போற்றி
புயலே பெயலே புரிவாய் போற்றி
அயலே வெயிலே ஆவாய் போற்றி
கரியுரிப் போர்வைக் கண்ணுதல் போற்றி
எரியுரு அன்ன இயற்கை போற்றி
மலைமகள் இடங்கொள் மலையே போற்றி
அலைநஞ் சயின்ற ஆதி போற்றி
தெண்ணிலாச் செஞ்சடைச் சீரோய் போற்றி
எண்ணிலா நடம்பயில் எங்கோன் போற்றி
உயிர்வெளி இடையே உறைந்தாய் போற்றி
தயிர்நெய் போலத் தணவாய் போற்றி
கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி
பெண்ணுள் அழகாய்ப் பிரியாய் போற்றி
அண்ட உண்டையில் அணுவே போற்றி
மணடிலந் தோறும் வளர்ந்தாய் போற்றி
ஊற்றாய் உள்ளே ஊறுவோய் போற்றி
காற்றாய் எங்கும் கலந்தாய் போற்றி
ஆறுசேர் சென்னி ஐயா போற்றி
நீறு சேர்மேனி நித்தா போற்றி
அரவொடும் பிறைமுடி அணியாய் போற்றி
இரவோடு பகல்நடம் இசைப்பாய் போற்றி
கொடுகொட்டி ஆடிய கூத்தா போற்றி
படுபாண் டரங்கம் பயின்றாய் போற்றி
காபாலம் ஆடிய காலோய் போற்றி
பூபா தந்தரு புகழோய் போற்றி
மன்றில் ஆடும் மணியே போற்றி
என்றுமெம் நெஞ்சில் இருப்போய் போற்றி
மீன்வலை வீசிய மீனவ போற்றி
கான்மாறி யாடும் கற்பகம் போற்றி
அத்தா அம்பலத் தாடி போற்றி
முத்தா முதல்வா முக்கணா போற்றி
எட்டுரு வாக இசைந்தாய் போற்றி
நட்டம் பயிலும் நாதா போற்றி
இமையவில் வாங்கிய ஈசா போற்றி
உமையிடம் பிரியா ஒருவ போற்றி
வாழ்க உலகம் வரமருள் போற்றி
சூழ்க நல் லனவந் துறவருள் போற்றி
நடந்தாய் போற்றி நாயக போற்றி
போற்றி பொன்னடிப் புதுமலர் போற்றி
போற்றி நடமிடு திருத்தாள் போற்றியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

### பண் - புறநீர்மை

*திருச்சிற்றம்பலம்*

*நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு*
*நிமலர்நீ றணி திருமேனி*
*வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த*
*வடிவினர் கொடியணி விடையர்*
*கரைகெழு சந்துங் காரகிற் பிளவு*
*மளப்பெருங் கனமணி வரன்றிக்*
*குரைகட லோதம் நித்திலங் கொழிக்குங்*
*கோண மாமலை யமர்ந்தாரே* 1

*கடிதென வந்த கரிதனை யுரித்து*
*வவ்வுரி மேனிமேற் போர்ப்பர்*
*பிடியன மடவாள் பெய்வளை மடந்தை*
*பிறைநுத லவளொடு முடனாய்க்*
*கொடிதெனக் கதறுங் குலைகடல் சூழ்ந்து*
*குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்*
*கோண மாமலை யமர்ந்தாரே* 2

*பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்*
*படர்சடை முடியிடை வைத்தார்*
*கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக*
*மாகமுன் கலந்தவர் மதின்மேல்*
*தனித்தபே ருருவ விழித்தழ னாகந்*
*தாங்கிய மேருவெஞ் சிலையாக்*
*குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த*
*கோண மாமலை யமர்ந்தாரே* 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் றேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னறற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோண மாமலை யமர்ந்தாரே 4

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பானீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயினுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோண மாமலை யமர்ந்தாரே 5

பரிந்து நன்மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லைக் கொடிவிடும் பொழில்சூழ்
கோண மாமலை யமர்ந்தாரே 6

எடுத்தவன் றருக்கை யிழிந்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோண மாமலை யமர்ந்தாரே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோண மாமலை யமர்ந்தாரே 8

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய லொடு முடனாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோண மாமலை யமர்ந்தாரே 9

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்து
முரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே 10

திருச்சிற்றம்பலம்

சுவாமி, தேவி திருநாமங்கள் - கோணேசுரர், மாதுமையாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

### பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

விருதுகுன்ற மாமேருவினாணர வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருதுகின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருதநின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினையடையாவே. 1

பாடல் வீணையர் பலபல சரிதையரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவரமரர்கள் வேண்ட நஞ்சுண்டிருள் கண்டத்தர்
ஈடமாவதுவிருங் கடற்கரையினிலெழிறிகழ் மாதோட்டம்
கேடிலாத கேதீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே 2

பெண்ணோர் பாகத்தர் பிறைதவழ் சடையினரறை கழல்சிலம்பார்க்கச்
சுண்ணமா தரித்தாடுவர் பாடுவரகந்தொறுமிடு பிச்சைக்
குண்ணலாவ தோரிச்சையினுழல் பவருயர்தருமா தோட்டத்
தண்ணனண்ணு கேதீச்சர மடைபவர் கருவினையடையாவே 3

பொடிகொண் மேனியர் புலியதளரையினர் விரிதருகரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர் மறிகடன்மாதோட்டத்
தடிகளாதரித்திருந்த கேதீச்சரம் பரிந்த சிந்தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார் தம்மேன் மொய்தெழும்
வினைபோமே 4

நல்லராற்றவு ஞானநன்குடையர் தம்மடைந்தவர்க்கருளிய
வல்லர் பார்மிசைவான் பிறப்பிலர் மலிகடன்மாதோட்டத்
தொல்லையில் புகழெந்தை கேதீச்சர மிராப்பகனினைந்தேத்தி
அல்லலா சறுத்தரனடியிணை தொழுமன் பராமடியாரே 5

பேழைவார் சடைபெருந் திருமகடனைப் பொருந்தவைத்தொருபாகம்
மாழையங்கயற் கண்ணி பாலருளிய பொருளினர் குடிவாழ்க்கை
